**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No. 466/2022

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 23ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. பூங்கொடி | வயது: 54 |
| க/பெ. : திரு. ஆறுமுகம் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 4.3.1975 – சின்னமலையப்பகவுண்டர் வகையறா இடையே ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 1** |
| 1.4.1975 – சின்னமலையப்பகவுண்டர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 2** |
| 2.9.1985 – 1ம் பிரதிவாதி ராமசாமி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 3** |
| 30.10.2013 – 1ம் பிரதிவாதி ராமசாமிக்கு சுப்பன்னகவுண்டர் (எ) சுப்பையன் எழுதிக்கு கொடுத்த தான செட்டில் மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | **வா.சா.ஆ 4** |
| 20.12.2021 – வாதி 1,2 பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| 1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | **வா.சா.ஆ 6** |
| 28.12.2021 – 1ம்பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு | அசல் | **வா.சா.ஆ 7** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம். அதற்கு 1, 2 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரி. பதில் அறிவிப்பு சங்கதிகளை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அதன் விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லை. 1ம் பிரதிவாதி எனக்கு மூத்த சகோதரர் என்றால் ஆமாம். எனக்கு திருமணம் நடந்து எத்தனை வருடம் ஆனது என்றால் என்னுடைய 19 வயதில் திருமணம் நடந்தது. எனக்கு முன்பே என் அக்காவிற்கு திருமணம் நடந்தது என்றால் சரி. வா.சா.ஆ– 3 ஆவணத்தில் உள்ள சொத்து என்னுடைய சகோதரர் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் ஆமாம். எங்கு நான் வசிக்கிறேன் எனறால் திருப்பூர் GH அருகே வசிக்கிறோம்.

2. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும். கிழக்கு புறம் வீடு அதற்கு பின்பு தோட்டம் உள்ளது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் பொது குடும்ப வருமானத்தை வைத்து 1ம் பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. என்ன விலைக்கு கிரையம் ஏற்பட்டது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி அவருடைய

தகப்பனாருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் ஆமாம். நானும் என்னுடைய சகோதரியும் திருமணம் செய்து கொண்ட பிறகு என்னுடைய பெற்றோரை 1ம் பிரதிவாதி பராமரித்து வந்தார் என்றால் சரி. சொத்துக்கள் எதுவும் அவர்கள் பெயரில் எழுதவில்லை. வா.சா.ஆ– 4 ஆவணம் என்னுடைய அப்பா 1ம்பிரதிவாதிக்கு ஏற்படுத்திகொடுத்துள்ளது செல்லாது என்று நான் சொல்லமுடியாது என்றால்தவறு. என் அப்பா நினைவில்லாத சமயத்தில் என் அண்ணன் எழுதிவாங்கியுள்ளார். வா.சா.ஆ– 4 ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. தாவாவிலும் முதல் விசாரணையிலும் வா.சா.ஆ– 4 ஆவணத்தை 1ம்பிரதிவாதி மோசடியாக பெற்றுள்ளார்எ ன்று சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். அம்மாதிரி என்னுடைய அண்ணன் அப்பாவை ஏமாற்றி நினைவில்லாத போது வா.சா.ஆ– 4 ஆவணத்தை ஏற்படுத்தினார் என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ– 4 ஏற்பட்ட பிறகு என்னுடைய அப்பா இறந்தபிறகு வா.சா.ஆ– 4 சொத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் 1ம் பிரிதிவாதி பெயரில் உள்ளது என்றால் தெரியாது. என் அப்பா எப்போது இறந்து போனார் என்றால் 8 வருடங்கள் ஆகிவிட்டது. 2017ம் வருடம் என்றால் ஆமாம். என் அப்பாஇறந்து 5 வருடம் கழித்து தான் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. பாகம் தருவதாக சொல்லிவிட்டு 1ம்பிரதிவாதி தரவில்லை. தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை. வாரிசு படி எனக்கு உரிமை உண்டு. 2ம் பிரதிவாதிக்கும் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் தவறு. 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாவா சொத்தில் அவருக்கும் எனக்கும் உரிமை இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தின் 1 பகுதி 1ம் பிரதிவாதி வா.சா.ஆ– 3 ன்படி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றுள்ளார். அதற்கு எனக்கு உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. மற்ற சொத்துக்கள் என்னுடைய அப்பா தானசெட்டில் மெண்ட் மூலம் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளதால் உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் தவறு. என்னுடைய அண்ணன் என் வீட்டில் நடக்கும் நல்ல கெட்ட காரியங்கள் கலந்து கொண்டு செய்முறைகளை செய்துள்ளார் என்றால் தவறு. எதுவும் செய்யவில்லை. 2017 ல் என் அப்பா இறந்துபோய்விட்டார். சொத்துக்கள் தற்சமயம் அதிக விலைக்கு விற்பதால் பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்துக்கள் வா.சா.ஆ– 3, 4 ன் படி 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் எனக்கு உரிமையோ பாத்தியமோ இல்லை. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா பரிகாரம் காலவரை தோஷத்தால் பாதிப்படைகிறது என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.23 18:44:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.